**இப்பாகமுவ பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்டம்பர் 28 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இப்பாகமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் பொதுக் களஞ்சயக் கணக்கு மீதி ரூபா. 115,320 இனால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா. 70,000 கொண்ட புரொஜெக்டரின் பெறுமதி பொதுக் களஞ்சியம் மற்றும் இயந்திர உபகரணத்தின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) காணியொன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான வைப்புத் தொகை மற்றும் அதற்கான வட்டி ஆகிய இரண்டின் கூட்டுத்தொகையாகிய ரூபா. 5,888,563 இற்கான வட்டி வேறாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்குப் பதிலாக முழுத் தொகையும் வருடத்திற்கான வருமானமாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா. 3,942,222 செலவிலான நிர்மாணிப்புகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையினால் பயன்படுத்தப்படும் 24 காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பொதுக் கணக்கிலிருந்து தொழில் கணக்கிற்கு மாற்றப்பட்ட ரூபா. 3,771,767 நடைமுறைச் சொத்தின் கீழ் பதியப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்று 05 வருமானத் தலைப்புகளுடன் தொடர்பான நிலுவை வருமானம் மற்றும் பி.ச.07 ஆவணத்தில் அன்றைய தினம் காணப்பட்ட

நிலுவை வருமானம் ஆகியவற்றுக்கிடையில் ரூபா. 2,558,048 வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மூலதன முதலீட்டுக்கு வருமானத்தினால் பங்களிப்புச் செய்யும் கணக்கின் மீதி மற்றும் மூலதன முதலீட்டுக்கு நன்கொடைகளால் பங்களிப்புச் செய்யும் கணக்கின் மீதி ஆகியன நிலையான சொத்தின் பெறுமதிக்கு சமமாக இருக்க வேண்டியிருந்த போதும் ரூபா. 983,387 வேறுபாடு காணப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்று பெற வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 154,163,881 ஆகவிருந்தது. 2018 ஜுன் 01 ஆம் திகதியன்று மேலும் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா. 98,908,804 ஆகவிருந்ததுடன், இதில் 2013, 2014 மற்றும் 2015 ஆகிய வருடங்களில் அறவிடப்பட வேண்டிய ரூபா. 4,444,778 வியாபாரக் கடன்பட்டோர் மீதி காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய நிதி கூட்டுத்தொகை ரூபா 73,819,862 ஆகவிருந்ததுடன் இதில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய வைப்புகள் தவிர்ந்த ஏனைய வைப்புகளை தீர்த்து வைப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான ஆதாரங்கள் காணப்படாமை**

<u>தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை</u>

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா. 181,250,876 பெறுமதியான 12 நிதி விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் பரிசீலிக்க முடியாது போனது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) சட்டம் | | |
| (i) 193 (1) விதி | | ஓவ்வொரு வருமான மற்றும் செலவு விடயத்தின் கீழான மேலதிகங்கள் மற்றும் மிகுதிகள் தொடர்பான கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 206 விதி | | மதிப்பீட்டுக் குழு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iii) | 218 விதி | | காணி மற்றும் கட்டடங்கள் தொடர்பில் வருடாந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை ஜனநாயக சோசலிசக் - குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 571 | 1,875,855 | 02 வருடங்களைத் தாண்டிய வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(இ) 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவை

| | |
|---|---|
| 4.2 வழிகாட்டி | சபையினால் பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 85,900,111 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 40,131,517 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 பட்டியலிட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2016 பட்டியலிட்ட வருமானம் | 2016 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2016 திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 11,846 | 6,304 | 4,669 | 5,542 | 5,694 | 6,351 | 2,955 | 6,219 |
| (ii) | வாடகை | 19,183 | 16,141 | 11,332 | 3,042 | 13,690 | 13,105 | 11,443 | 4,667 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 2,005 | 2,005 | 2,005 | - | 2,100 | 2,054 | 898 | 70 |
| (iv) | ஏனைய வருமானம் | 286,905 | 173,150 | 122,290 | 113,755 | 108,815 | 108,225 | 73,041 | 59,666 |
| | மொத்தம் | 319,939 | 197,600 | 140,296 | 122,339 | 130,299 | 129,735 | 88,337 | 70,622 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானமாகிய ரூபா. 197 மில்லியனில் ரூபா. 140 மில்லியன் அறவிடப்பட்டிருந்ததுடன், இதில் ரூபா. 67 மில்லியன் முன்னைய வருடங்களுடன் தொடர்புடையவையாகவிருந்தது. முன்னைய வருடத்தின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று காணப்பட்ட ரூபா. 70 மில்லியன் நிலுவை வருமானம் மீளாய்வாண்டில் ரூபா. 122 மில்லியனாக அதிகரித்திருந்தது.

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா. 4,969,987 ஆகவிருந்த வீதவரி நிலுவை பிரதேச சபை சட்டத்தின் பிரமாணங்களுக்கமைவாக அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்காததன் காரணமாக அறவிடலில் மந்த நிலை காணப்பட்டது.

(ஆ) பிரதேச சபை எல்லையினுள் காணப்படும் புதிய அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை இனங்கண்டு வர்த்தமானியில் வெளியிடல் 30 வருடங்களாக மேற்கொள்ளப்படாமலிருந்துள்ளது.

### 2.2.4 குத்தகை மற்றும் கடை வாடகை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று அறவிடப்பட வேண்டிய குத்தகை மற்றும் கடை வாடகை ரூபா. 3,043,361 ஆகவிருந்ததுடன் இதில் ரூபா. 2,903,261 ஒரு வருடத்திற்கும் மேலாக அறவிடப்பட வேண்டிய நிலுவையாகக்காணப்பட்டது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து 2017 திசெம்பர் 31 அன்று பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 5,029,205 மற்றும் ரூபா 90,000,000 ஆகவிருந்ததுடன் மீளாய்வாண்டில் முத்திரைக் கட்டணம் எதுவும் சபைக்குக் கிடைத்திருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும்

கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவிற்கமைவாக 30 பிரதான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக உப விதிகள் உருவாக்கப்பட வேண்டியிருந்த போதும் 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 51 செயற்பாடுகளுக்காக மாத்திரம் உப விதிகள் உருவாக்கப்பட்டிருந்தன.

**(ஆ) எதிர்பார்த்த நிறைவு மட்டத்தினை அடையாமை**

மீளாய்வாண்டில் செயற்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டிருந்த 83 அபிவிருத்தி முன்மொழிவுகளின் பெறுமதி ரூபா. 56,175,968 ஆகவிருந்த போதும், இதில் ரூபா. 26,500,000 பெறுமதியான 66 வேலைகள் மற்றும் முன்மொழிவுகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையமொன்றினை அமைப்பதற்காக 2017 மே 16 ஆம் திகதி ரூபா. 6 மில்லியன் செலவில் ஒரு காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதி வரை அதன் நிர்மாணப் பணிகள் திட்டமிடப்படாத அதேவேளை, உக்கக்கூடிய கழிவுகள் தனியார் காணிகளில் குழிகள் தோண்டப்பட்டு புதைக்கப்பட்டு வந்தது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2015 – 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்த போதும், வறுமையை ஒழித்தல், பசியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தல், போசாக்கு விருத்தியை ஏற்படுத்தல், சுகாதாரமாக வாழ்வை உறுதி செய்தல் ஆகிய நோக்கங்களை இலக்காகக் கொண்டு கைவிடப்பட்ட கிராம அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் 07 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக சுகாதார வேலைத் திட்டத்தின் கீழ் டெங்கு நோயினைக் கட்டுப்படுத்துவதற்காக சிரமதானங்கள் மற்றும் வாரத்தில் ஒரு முறை தொற்று நோய்கள் தொடர்பில் கூட்டங்களை நடாத்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் காணப்படும் 126 மயானங்களில் 124 சபையினால் கையேற்கப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டின் வரவு வெலவுத் திட்டத்தில் மயானங்களின் புனரமைப்பிற்காக ரூபா. 500,000 நிதி காணப்பட்டாலும், இதன் மூலமாக எந்தவொரு புனரமைப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 74 மயானங்களில் வேலிகள் அமைக்கப்பட்டு இனங்காணக்கூடிய முறையில் வேறாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மெல்சிரிபுர வாராந்த சந்தையின் சகல கட்டிடங்களும் பாவனைக்கு உகந்த நிலையில் இல்லாதிருந்த போதும் தேவையான புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்படாமை காரணமாக பொதுமக்களினதும் வியாபாரிகளினதும் உயிர்ப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

-------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அனுமதிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பணிக் குழுவில் உயர்மட்ட, இடைநிலை மற்றும் ஆரம்ப நிலை பதவிகளுடன் தொடர்பான 28 வெற்றிடங்கள் மற்றும் இடைநிலை மற்றும் ஆரம்ப நிலை பதவிகளுடன் தொடர்பான 36 மேலதிகங்கள் காணப்பட்டன. அனுமதிக்கப்பட்ட பணிக்குழுவிற்கு மேலதிகமாக 27 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஆ) 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கமைய நிரந்தரமாக்கப்பட்ட 25 ஊழியர்களில் 09 பேர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டிருக்க வில்லை.

(இ) குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் இணைத்துக்கொள்ளப்பட்ட 03 ஊழியர்களுக்கு பதவியுடன் தொடர்பான கடமைகள் வழங்கப்படாது அலுவலகம் சார்ந்த கடமைகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) வேலை இடைநிறுத்தம் அடிப்படையில் சேவையை முடித்துக்கொண்ட ஒரு ஊழியரிடம் பெற வேண்டியிருந்த ரூபா. 126,769 கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயலிழந்த சொத்துக்கள்**

-----------------------------------------------

நிழற்பிரதி இயந்திரம் ஒன்றும் லேசர் அச்சுப்பொறி இயந்திரம் ஒன்றும் சுமார் 05 வருட காலமாக பாவிக்கப்படாது இருந்தன.

**3.5 பெறுகைகள்**

---------------------

**3.5.1 ஒப்பந்த நிர்வாகம்**

----------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா. 1,752,434 செலவில் ஹுபுலுகல ஆரண்ய சேனாசன பாதைக்கு கொங்ரீட் கற்கள் பதிக்கப்பட்டிருந்த போதும், சில இடங்களில் இக் கற்கள் இறங்கியிருந்தன. மேலும், பாதை மருங்குகளில் இடப்பட்டிருந்த கொங்ரீட் வளைவான இடங்களில் வெடித்தும் நெரிசலடைந்தும் காணப்பட்டது. பாதை மருங்குகளில் இடப்பட்டிருந்த கொங்ரீட் பாதையின் மட்டத்திற்கே இரண்டு பக்கங்களிலும் ஒரே உயரத்தில் இடப்படாமலிருந்ததுடன், சில இடங்களில் கொங்கிரீட் கற்களுக்கு மேலாகவும் சில இடங்களில் கொங்கிரீட் கற்களுக்கு கீழாகவும் இடப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா. 548,795 செலவில் தித்தவெல்ல வித்தியாலயத்திற்கருகில் பாதைக்கு கொங்ரீட் கற்கள் பதிக்கும் போது பாதையின் ஆரம்பத்தில் இடப்பட்டிருந்த 17.6 அடி நீளமும் 6 அங்குலம் அகலமான கொங்ரீட் மருங்கு 6 இடங்களில் வெடித்துக் காணப்பட்டது.

(இ) வட மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீடு 2017 இன் கீழ் ரூபா. 2,000,000 மதிப்பீட்டில் ஹுபுலுகல ஆரண்ய சேனாசன பாதைக்கு கொங்ரீட் இடுகையில் கொங்ரீட் படையின் உயரம் 6 அங்குலம் இருக்க வேண்டியிருந்த போதும், பாதையின் நடுவில் இவ்வுயரம் 5 அங்குலமாக இருந்தது. மேலும், கொங்ரீட் இடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட மணல் அதற்குப் பொருத்தமற்ற சேற்றுடன் கூடிய கழுவப்பட்ட மணல் என்பது 2017 ஆகஸ்ட் 28 ஆம் திகதி நடாத்தப்பட்ட பௌதீக ஆய்வின் போது தெரிய வந்தது.

(ஈ) வேலை முடிக்கப்பட்ட பெறுமதி ரூபா. 4,323,983 கொண்ட 650 மீற்றர் நீளமும் 3 மீற்றர் அகலமும் உடைய கனேவத்த நெலவ ஸ்ரீ ஜய மாவத்தை வீதி அலுத்கம வீதி வரை கொங்ரீட் இடப்பட்டு ஒரு மாதத்தில் பாதைக்கு இடப்பட்ட கற்கள் மற்றும் மணல் வெளிப்படுவதையும் முற்றாக கழன்று வருவதையும் காண முடிந்ததுடன் கொங்ரீட் தட்டினை உடைத்துப் பரிசோதித்த பொழுது மிக எளிதில் உடைந்து வேறாவதை 2017 செப்தம்பர் மாதம் நடாத்தப்பட்ட பௌதீக ஆய்வின் போது தெரிய வந்தது.

(உ) 2012 ஆம் ஆண்டு வேலை ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது செயற்பாட்டிலுள்ள நாபெட நீர் வழங்கும் திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டு சபை நிதி மூலம் நீர்த்தாங்கி ஒன்றை அமைப்பதற்காக ரூபா. 1,336,545 செலவிடப்பட்டிருந்தது. நீர்த் தாங்கியின் அடியில் நீர் கசிவு காணப்படுவது 2015 நவம்பர் மற்றும் 2017 செப்டம்பர் மாதங்களில் நடாத்தப்பட்ட பௌதீக ஆய்வுகளின் போது தெரிய வந்தது.

(ஊ) 2014 ஆம் ஆண்டு ரூபா. 164,816 செலவில் அமைக்கப்பட்டிருந்த ஹிரிபிடிய உப அலுவலகத்தின் வாகன நிறுத்துமிடத்தில் காணப்பட்ட கட்டட நிர்மாணக் குறைபாடுகள் மீளாய்வாண்டிலும் சரிசெய்யப்படாதிருந்ததுடன், குறித்த கட்டிடம் இடிந்து வீழ்ந்து கொண்டிருந்தது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2014 ஆகஸ்ட் 14 ஆம் திகதி வரை பிரதேச சபை நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகளுக்கமைவாக வரவு செலவுத் திட்டத்தினுள் அடங்காத ரூபா. 7,963,037 பெறுமதியான 12 திட்டங்கள் பிரதான அலுவலக நிர்மாணப் பணிகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் கீழ்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) நிலையான சொத்துக்கள் குறைவாகக் கணக்கிடப்பட்டமை |
| | (ii) மூலதனச் செலவுகள் |
| | (iii) களஞ்சியப் பொருட்களின் கிரயம் பிழையாக குறிக்கப்பட்டமை |
| | (iv) வருடத்தின் வருமானம் இனங்காணப் படாமை |
| (ஆ) வருமானங்கள் | (i) நிலுவை வருமானங்களை அறவிடுவதில் குறைபாடுகள் காணப்பட்டமை |
| | (ii) ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்படாமை |
| | (iii) வீதவரிக்கான பிரதேசங்கள் இனங்காணப்பட்டு வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்காமை |
| (இ) நிலையான சொத்துக்கள் | (i) நிலையான சொத்துப் பேரேடுகள் பராமரிக்கப்படாமை |

| | |
|---|---|
| | (ii) பயன்பாடற்ற மற்றும் குறை பயன்பாடுடைய சொத்துக்கள் காணப்படல். |
| | (iii) சொத்துக்களின் உரித்தினை கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) ஒப்பந்த நிர்வாகம் | (i) வீதி நிர்மாணம் குறித்த தரத்தில் காணப்படாமை |
| | (ii) கட்டிட புனர் நிர்மாணங்கள் குறித்த தரத்தில் காணப்படாமை |